**செப்டம்பர் – 12**

# TNPSC துளிகள்

- அருந்ததி ராய் 'Mother Mary Comes to Me' என்ற தனது சொந்த நினைவுக் குறிப்பை எழுதி உள்ளார்.
- பீங்கான் கழிவுகளால் ஆன உலகின் முதல் பூங்காவான 'அனோகி துனியா' உத்தரப் பிரதேசத்தின் குர்ஜாவில் திறக்கப்பட உள்ளது.
- வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம் மற்றும் ஜம்மு & காஷ்மீரில் ரஹத் நடவடிக்கை என்ற திட்டத்தின் கீழ் இந்திய இராணுவம் பெரிய அளவிலான நிவாரணப் பணியை நடத்தியது என்ற நிலையில் இதில் மக்கள் வெளியேற்றம், மருத்துவ உதவி மற்றும் உள்கட்டமைப்பு மறுசீரமைப்பு ஆகியவை அடங்கும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் 80 ஆம் ஆண்டு நிறைவு




- முன்னாள் கல்வி அமைச்சர் T.S. அவினாசிலிங்கம் செட்டியாரால் சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ் 1946 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது.
- சென்னைப் பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் செயல்பட்டு வருகின்ற இந்தக் கழகம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அதன் 80வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.
- முன்னாள் மத்திய உள்துறை மற்றும் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் இந்தக் கழகத்தின் அறங்காவலர் குழுவின் தலைவராக உள்ளார்.
- இணையத்தில் ஸ்கேன் செய்யப்பட்ட தமிழ் உள்ளடக்கத்தை ஒளியிழை உருவ அடையாள அங்கீகார (OCR) முறையைப் பயன்படுத்தி, அதனைத் தேடக் கூடிய உரையாக மாற்றும் திட்டத்தை இந்தக் கழகம் தொடங்கியுள்ளது.
- இந்த டிஜிட்டல் மயமாக்கல் முன்னேடுப்பிற்காக விக்கிபீடியா மற்றும் மத்திய செம்மொழி தமிழ் நிறுவனத்துடன் இந்தக் கழகம் கூட்டு சேர்ந்துள்ளது.

- அதன் செயல்பாடுகளை ஆதரிக்க தமிழக முதல்வர் 2.15 கோடி ரூபாய் நிதியை வழங்கினார்.
- இது தமிழ் கலைக்களஞ்சியத்தின் 10 தொகுதிகள், குழந்தைகள் இலக்கியத்தின் 10 தொகுதிகள், மருத்துவம் பற்றிய 13 தொகுதிகள் மற்றும் சித்த மருத்துவம் பற்றிய 7 தொகுதிகளை வெளியிட்டுள்ளது.
- தமிழ்-தமிழ்-ஆங்கில மாணவர் அகராதி மற்றும் உலகளாவிய தமிழ் புத்தகப் பட்டியல் உட்பட ஆறு திட்டங்களையும் கழகம் செயல்படுத்தி வருகிறது.
- தமிழ் நாடகக் கலைக்களஞ்சியம், தமிழ் சிந்தனைகளின் கலைக்களஞ்சியம், தமிழ் சொல்லாக்கம் மற்றும் தமிழியல் கட்டுரைக் காப்பகம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வரும் பிற திட்டங்களில் அடங்கும்.
- இந்த அகராதித் திட்டம் ஆனது, புலம்பெயர்ந்தத் தமிழர்களின் குழந்தைகளை இலக்காகக் கொண்டது மற்றும் இதனை நிறைவு செய்ய ஓராண்டு ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## கடல்சார் வள அறக்கட்டளை மற்றும் மறுசீரமைப்புச் சபை




- கடல்சார் பல்லுயிரியலைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கடல் சார் வள அறக்கட்டளையைத் (TNMRF) தொடங்கியது.
- TNMRF ஆனது அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாக்கும் மற்றும் பவளப்பாறைகள், சதுப்புநிலங்கள் மற்றும் கடல்சார் புல் இனங்களின் சுற்றுச்சூழல் அமைப்புகளை மறு சீரமைக்கும்.
- இந்த அறக்கட்டளையானது சுற்றுச்சூழலுக்கு உகந்தச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சார் கல்வி, பல்லுயிர்ப்பெருக்கங்களின் ஆய்வு அறிக்கை மற்றும் கடல் சார் புவியியல் தகவல் அமைப்புகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும்.
- மீன் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடலோர கைவினைப் பொருட்கள் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளில் மீனவர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் இது நிலையான வாழ்வாதாரத்தை ஆதரிக்கும்.
- மணாலி எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர்ப்புச் சபை (MERRC) ஆனது, அதிக சுற்றுச்சூழல் பாதிப்பு கொண்ட மணாலி-எண்ணூர் பகுதியை மீட்டெடுக்கத் தொடங்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எண்ணெய் கசிவுக்குப் பிறகு நிறுவப்பட்ட MERRC பசுமைத் திட்டங்கள், நீர்நிலை மறுசீரமைப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

- வெள்ளம், புயல் மற்றும் தொழில்துறை விபத்துகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு தண்டையார்பேட்டையில் ஒரு நவீன அவசரகால மீட்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் 15வது குடியரசுத் துணைத் தலைவர்




- செப்டம்பர் 09 ஆம் தேதியன்று இந்தியாவின் 15வது குடியரசுத் துணைத் தலைவராக C.P. இராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவர் எதிர்க் கட்சியான INDIA கூட்டணியின் வேட்பாளர் நீதிபதி B. சுதர்ஷன் ரெட்டியை 452 முதல் நிலை விருப்பத் தேர்வு வாக்குகளைப் பெற்று தோற்கடித்தார்.
- ஜக்தீப் தன்கர் உடல்நலக் காரணங்களால் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து ஜூலை 21 ஆம் தேதி முதல் குடியரசுத் துணைத் தலைவர் பதவி காலியாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் மகாராஷ்டிராவின் ஆளுநராகப் பணியாற்றிய அவர், முன்பு ஜார்க்கண்ட், தெலுங்கானா (கூடுதல் பொறுப்பு) மற்றும் புதுச்சேரி (கூடுதல் பொறுப்பு) ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பதவி வகித்தார்.
- கோவை தொகுதியிலிருந்து இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இவர், RSS மற்றும் பாரதிய ஜன சங்கத்துடன் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்.
- அவர் பாஜக கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராகவும், பாராளுமன்ற நிலைக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார்.
- 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரை, அவர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் (MSME) அமைச்சகத்தின் கீழ் உள்ள கயிறு வாரியத்திற்குத் தலைமை தாங்கினார்.
- 2020 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், அவர் கேரளாவிற்கான பாஜக கட்சியின் பொறுப்பாளராக இருந்தார் மற்றும் ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவிற்கான சர்வதேசப் பிரதிநிதிகளை வழிநடத்தினார்.

## பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம்





- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றம், பீகாரில் வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) நடைமுறைக்கு ஆதாரை 12வது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணமாகக் கருதுமாறு இந்திய தேர்தல் ஆணையத்திற்கு (ECI) உத்தரவிட்டது.
- ஆதாரை இந்தியக் குடியுரிமைக்கான சான்றாக அல்ல, அடையாளச் சான்றாக அல்லது வசிப்பிடச் சான்றாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும் என்று நீதிபதிகள் அமர்வு தெளிவுபடுத்தியது.
- தேர்தல் பதிவு அதிகாரிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் (BLO) உட்பட அனைத்துத் தேர்தல் அதிகாரிகளும், கோரிக்கைகள் அல்லது ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்கு ஆதாரை ஏற்றுக் கொள்ளுமாறு ECI அறிவுறுத்த வேண்டும்.
- குடும்ப அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ் போன்ற பிற ஆவணங்களைப் போலவே, ஆதாரின் நம்பகத்தன்மையை அதிகாரிகளால் சரி பார்க்க முடியும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.
- பீகாரில் மொத்தம் உள்ள 7.89 கோடி வாக்காளர்களில் ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட வரைவுப் பட்டியலில் இருந்து சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் விலக்கப் பட்டுள்ளனர்.
- கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளுக்கான காலக்கெடு ஆனது செப்டம்பர் 01 ஆம் தேதி என்றாலும், அந்தத் தேதிக்குப் பிறகு சமர்ப்பிப்புகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று ECI பின்னர் தெளிவுபடுத்தியது.
- ஆதாரைச் சமர்ப்பிக்கும் உரிமை குறித்து வாக்காளர்கள் அறிந்திருப்பதை உறுதி செய்ய, இந்த உத்தரவு குறித்து பரந்த விளம்பரம் அளிக்குமாறு ECI ஆணையத்திடம் உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.

## டிஜிட்டல் வாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027

- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பானது, இந்தியாவின் முதல் முழுமையான எண்ணிம வழி/டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆக அமையும்.
- சுமார் 34 லட்சம் கணக்கெடுப்பாளர்கள் தங்கள் சொந்தத் திறன்பேசிகளைப்

பயன்படுத்தி தரவுகளைச் சேகரிப்பார்கள்.


- தரவுச் சேகரிப்புக்கு ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளில் பிரத்யேக கைபேசி செயலிகள் பயன்படுத்தப்படும்.
- கணக்கெடுப்பாளர்கள் செயலிகள் மூலம் நேரடியாக ஒரு மைய சேவையகத்தில் தரவை பதிவேற்றுவார்கள்.
- கணக்கெடுப்பாளர் நிலையிலேயே மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவு எண்ணிம மயமாக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- வீட்டு வசதிப் பட்டியலிடல் கட்டம் ஆனது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை நடைபெறும்.
- நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கும்.
- லடாக் மற்றும் இமாச்சலப் பிரதேசம் போன்ற மலைப்பாங்கான பகுதிகளில், மக்கள் தொகை கணக்கெடுப்பு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெறும்.
- அனைத்து கட்டிடங்களுக்கும் டிஜிட்டல் வடிவமைப்புத் திட்டமிடல் மற்றும் GIS தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் புவிசார் குறியீடுகள் வழங்கப்படும்.
- நிகழ்நேரக் கண்காணிப்பு வலைத்தளம் மற்றும் 14,618.95 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு ஆகியன இந்தியத் தலைமைப் பதிவாளரால் திட்டமிடப்பட்டுள்ளது.




## 2023–24 ஆம் ஆண்டில் இந்தியாவின் எழுத்தறிவு விகிதம்

- கல்வி அமைச்சகத்தின்படி, 2011 ஆம் ஆண்டில் 74 சதவீதமாக இருந்த இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 2023–24 ஆம் ஆண்டில் 80.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- ULLAS–நவ் பாரத் சாக்சார்த்த காரியக்ரமின் கீழ் 3 கோடிக்கும் மேற்பட்ட கற்பவர்களும் 42 லட்சம் தன்னார்வலர்களும் சேர்ந்துள்ளனர்.

- 90 சதவீத வெற்றி விகிதத்துடன், சுமார் 1.83 கோடி கற்பவர்கள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.
- உள்ளார்ந்த எழுத்தறிவை ஊக்குவிப்பதற்காக இந்தத் திட்டம் 26 இந்திய மொழிகளில் கற்றல் பொருட்களை வழங்குகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதியன்று முழு கல்வியறிவு பெற்ற முதல் ஒன்றியப் பிரதேசமாக லடாக் அறிவிக்கப்பட்டது.
- திரிபுரா, மிசோரம் மற்றும் கோவாவுடன் இணைந்து முழு செயல்பாட்டுக் கல்வியறிவு பெற்ற நான்காவது மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## பிரான்சு அரசியல் நெருக்கடி

- பாராளுமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததையடுத்து பதவியேற்ற ஒன்பது மாதங்களே ஆன பிரெஞ்சு நாட்டின் பிரதமர் பிரான்சுவா பேய்ரூ 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- இந்த வாக்கெடுப்பில் 364 பிரதிநிதிகள் அரசாங்கத்தை எதிர்த்தனர் மற்றும் 194 பேர் அரசாங்கத்தை ஆதரித்தனர் இதனால் பிரெஞ்சு அரசியலமைப்பின் 50வது சரத்தின் கீழ் பேய்ரூ தனது ராஜினாமாவை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- நம்பிக்கையிலா தீர்மானம் மூலமாக அல்லாமல், சர்ச்சைக்குரிய €44 பில்லியன் சிக்கன நிதி ஒதுக்கீட்டின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு மூலம் நீக்கப்பட்ட முதல் நவீன கால பிரெஞ்சு பிரதமராக பேய்ரூ ஆனார்.
- பேய்ரூவின் வெளியேற்றம் 2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐந்தாவது பிரதமர் மாற்றத்தையும், 2017 ஆம் ஆண்டில் தொடங்கிய மக்ரோனின் அதிபர் பதவிக் காலத்திலான ஒட்டு மொத்த ஆறாவது மாற்றத்தையும் குறிக்கிறது.




### நேபாள அரசியல் நெருக்கடி





- ❖ வன்முறை ஊழல் எதிர்ப்புப் போராட்டங்களில் 22 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, நேபாளப் பிரதமர் K. P. சர்மா ஒலி 2025 ஆம் அண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று ராஜினாமா செய்தார்.
- ❖ தற்போது திரும்பப் பெறப்பட்ட வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட 26 சமூக ஊடகத் தளங்கள் மீதான தடையைத் தொடர்ந்து போராட்டங்கள் வெடித்தன.
- ❖ காவல் துறையினருடன் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான Z தலைமுறை ஆர்ப்பாட்டக்காரர்கள், பாராளுமன்றத்திற்கு தீ வைத்து, நேபாளம் முழுவதும் உள்ள அரசியல்வாதிகளின் வீடுகளைத் தாக்கினர்.

## மாநிலச் செய்திகள்

### பஞ்சாப் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் வான்வழி ஆய்வு

- ❖ பிரதமர் இமாச்சலப் பிரதேசம் மற்றும் பஞ்சாபில் வெள்ளம், நிலச்சரிவு மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வான்வழியாக ஆய்வு செய்தார்.

- சேதத்தை மதிப்பிடுவதற்காக இரு மாநில அரசுகளுடனும் அவர் மறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி நிதி உதவித் தொகுதிகளை அறிவித்தார்.
- இமாச்சலப் பிரதேசத்திற்கு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக 1,500 கோடி ரூபாய், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபாய், கருணைத் தொகை மற்றும் காயமடைந்தவர்களுக்கு 50,000 ரூபாய் அறிவிக்கப்பட்டது.
- பிரதமர் பஞ்சாப் மாநிலத்தில், ஏற்கனவே மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட 12,000 கோடி ரூபாய்க்கு மேலாக 1,600 கோடி ரூபாய் கூடுதல் உதவியை அறிவித்தார்.
- பஞ்சாபிற்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதி மற்றும் பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதியின் இரண்டாவது தவணையை முன்கூட்டியே விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது.
- பஞ்சாபில், 2,097க்கும் மேற்பட்ட கிராமங்களும் 3.88 லட்சத்திற்கும் அதிகமான மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதோடு 52 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் பரவலான பயிர் மற்றும் கால்நடை இழப்பு ஏற்பட்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பூபன் ஹசாரிகாவின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு

- பூபன் ஹசாரிகாவின் 100வது பிறந்தநாளின் அன்று ஆண்டுதோறுமான தேசிய அளவிலான கொண்டாட்டங்கள் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று அசாமின் கௌஹாத்தியில் தொடங்கப்பட்டன.
- அவரது நினைவாக இந்திய ரிசர்வ் வங்கி 100 ரூபாய் நினைவு நாணயத்தை வெளியிட உள்ளது.
- ஹசாரிகாவுக்கு 2019 ஆம் ஆண்டில் அவரது மறைவுக்குப் பின் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.
- அசாமின் நதிக்கரை கலாச்சாரத்துடனான அவரது ஆழமான தொடர்பிற்காக அவர் 'பிரம்மபுத்திராவின் பார்ட்' என்று பரவலாக அறியப்படுகிறார்.
- மனுஹே மனுஹோர் பேப், பிஸ்டிர்னோ பரோர் மற்றும் கங்கா பெஹ்தி ஹோ கியூன் போன்ற அவரது பிரபலமான பாடல்கள் மனிதநேயம், நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் கருப்பொருள்களைக் கொண்டிருந்தன.

- கவிஞர், பாடலாசிரியர், பாடகர், இசையமைப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் அரசியல்வாதியான ஹசாரிகாவின் படைப்புகள் பிராந்திய எல்லைகளைத் தாண்டி அசாம் மாநிலத்தினை தேசிய மற்றும் உலகளாவியப் பார்வையாளர்களுடன் இணைத்தன.
- ஜலுக்பாரியில் உள்ள அவரது நினைவிடம் பூபன் ஹசாரிகா சமன்னய் தீர்த்தா என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- அவரது மரபினைப் பாதுகாக்க ஸ்ரீமந்தா சங்கர்தேவ் கலாசேத்திராவில் ஒரு புதிய அருங்காட்சியகம் கட்டமைக்கப்பட உள்ளது.
- அனுராதா சர்மா பூஜாரி எழுதிய வாழ்க்கை வரலாறு முக்கிய இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நாடு முழுவதும் உள்ள நூலகங்களுக்கு விநியோகிக்கப்படும்.
- இந்த நூற்றாண்டு விழா 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று புது டெல்லியில் நடைபெற உள்ள இந்தியக் குடியரசுத் தலைவர் கலந்து கொள்ளும் ஒரு முக்கிய நிகழ்வோடு நிறைவடையும்.





## முக்கிய தினங்கள்

### கழுகு விழிப்புணர்வு தினம் 2025 - செப்டம்பர் 06



- இது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று நினைவு கூரப்படுகிறது.
- கழுகுகளின் (பிணந்தின்னிக் கழுகு) வளங்காப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக உலகளவில் கழுகுகளின் எண்ணிக்கை பேரழிவு தரும் வகையிலான சரிவை எதிர்கொண்டு வருகிறது.
- டைக்ளோஃபெனாக், கீட்டோபுரோஃபென் மற்றும் அசெக்ளோஃபெனாக் போன்ற கால்நடை மருந்துகளின் பரவலான பயன்பாடு கழுகுகளின் எண்ணிக்கையில் பேரழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் 9 வகையான கழுகுகள் உள்ளன.

## உலக துச்சேன் விழிப்புணர்வு தினம் 2025 - செப்டம்பர் 07




- இது துச்சேன் தசைநார் சிதைவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- துச்சேன் தசைநார் சிதைவு (DMD) என்பது ஓர் அரிய பாதிப்பு உள்ள அதிகரிக்கக்கூடிய கோளாறு ஆகும்.
- DMD உள்ளவர்களில் தசை பாதுகாக்கும் புரதம் இருக்காது.
- இது டிஸ்ட்ரோபினை உருவாக்கும் மரபணுவில் உள்ள ஒரு குறைபாட்டால் ஏற்படுகிறது.
- இந்தப் பாதிப்பில் தசைகள் காலப்போக்கில் பலவீனமடைந்து முழு உடலையும் பாதிக்கும்.
- இது X-குரோமோசோமில் ஏற்படும் ஒரு பிறழ்வால் ஏற்படுவதால், ஆண்கள் பெரும்பாலான அளவில் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Family: the heart of care" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## சூரிய உதய விழா

- அருணாச்சலப் பிரதேசத்தின் அஞ்சாவ் மாவட்டத்தில் உள்ள டோங் கிராமத்தில் ஐந்து

நாட்கள் அளவிலான சூரிய உதய விழா நடைபெற உள்ளது.

- டோங் சீனாவின் திபெத்தை எல்லையாகக் கொண்டு இந்தியாவின் கிழக்கு முனையில் அமைந்துள்ளது என்பதோடு மேலும் இது இந்தியாவில் ஒவ்வொரு நாளும் சூரிய ஒளியைப் பெறும் முதல் இடமாகும்.
- இந்த விழாவானது புத்தாண்டின் முதல் சூரிய உதயத்தின் தனித்துவமான காட்சியை வழங்கும் வகையில் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் தேதி முதல் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 02 ஆம் தேதி வரை நடைபெறும்.
- டோங் பகுதி கடல் மட்டத்திலிருந்து 1,240 மீட்டர் உயரத்தில், இந்தியா, சீனா மற்றும் மியான்மர் ஆகிய மூன்று நாடுகளின் சந்திப்பில் அமைந்துள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★